# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2056 ஜனவரி 18, 2025

Weekly E-paper • January 18, 2025




## சீமானின் வீழ்ந்துவிட்ட வீரம்! மண்டியிட்ட மானம்!

சுப.வீரபாண்டியன்

### தமிழ்நாட்டைக் காக்கும் அரண் பெரியார்!

தோழர் தியாகு

### தமிழரை அவமதிக்கும் ஆளுநர்

தலையங்கம்

### எதைத் தருவார் சீமான்?

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056 ஜனவரி 18, 2025

Weekly E-paper ● January 18, 2025


# சீமானின் வீழ்ந்துவிட்ட வீரம்! மண்டியிட்ட மானம்!

**சுப.வீரபாண்டியன்**

தந்தை பெரியார் குறித்து தரக்குறைவான விமர்சனங்களையும், ஆதாரம் இல்லாத அவதூறுகளையும் அள்ளி வீசிக் கொண்டிருக்கிறார் சீமான்! இதனை ஒரு மனநோயாளியின் உளறல் என்றோ, மலிவான விளம்பரத்திற்காகப் பேசப்படும் பேச்சு என்றோ கருதி ஒதுக்கி விடக்கூடாது! இதற்குப் பின்னால் திட்டமிட்ட, கலவரத்தைத் தூண்டக்கூடிய ஆர் எஸ் எஸ் அமைப்பின் சதி இருப்பதாகவே கருத வேண்டியுள்ளது.




பேசப்பட வேண்டிய செய்திகள் நாட்டில் எவ்வளவோ இருக்க, எல்லாவற்றையும் விட்டுவிட்டுப் பெரியாரை அடித்து நொறுக்குவதும், திராவிடத்தை முடித்துக் கட்டுவதும்தான் என் வேலை என்று, இதற்கு முன் எப்போதும் இல்லாத அளவுக்கு, இப்போது சீமான் திடீரென்று பேசிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். எதனால் இப்படி ஒரு நிலைப்பாட்டினைச் சீமான் எடுத்துள்ளார் என்று எண்ணிப் பார்க்க வேண்டி இருக்கிறது. இந்தக் கேள்விக்கு அவர் ஒரு விடை சொல்கிறார்

2008 ஆம் ஆண்டு அண்ணனை (பிரபாகரன்) ப் பார்க்கும் வரையில், நானும் இந்தக் கூட்டத்தில்தான் இருந்தேன். அவரைப் பார்த்ததற்குப் பின்னால், எனக்கு உண்மைகள் தெரிந்து விட்டன. நான் பெரியாரைப் போற்றியதெல்லாம், நான் வழி நடந்த பாதை! இப்போது பேசுவதுதான் நான் வழிகாட்டும் பாதை என்கிறார்!

2008 க்குப் பிறகுதான், தனக்கு அறிவும், ஞானமும் வந்தது என்பது போலப் பேசுகிறார். அப்போது அவருக்கு வயது 42! அதாவது 41 வயது வரையில் அறிவும் தெளிவும் இல்லாதவராக அவர் இருந்திருக்கிறார் என்பதை அவர் கூற்று வெளிப்படுத்துகிறது.

போகட்டும், 2008 இல் எல்லா ஞானமும் வந்துவிட்டது அல்லவா....! பெரியார் இனத் துரோகி என்பதும் புரிந்து விட்டது அல்லவா....! பிறகு ஏன் அதற்குப் பிறகும் பெரியாரின் நினைவைப் போற்றிச் சுவரொட்டிகள் நாம் தமிழர் கட்சியின் சார்பில் வெளியிடப்பட்டன? எதற்காகக் கட்சி வெளியிட்ட இன எழுச்சி மாநாட்டு மலரில், தந்தை பெரியாரின் படமும், அவரைப் பற்றிய கட்டுரையும் இடம்பெற்றன ? எதற்காகச் சென்னை, எம்ஜிஆர் நகர் மார்க்கெட் தெருவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பெரியாரைப் போற்றிப் புகழ்ந்து சீமான் பேசினார்? எதற்காவது அவர்களிடம் விடை உண்டா?

மேதகு பிரபாகரன், பெரியார் குறித்தும் - திராவிடம் குறித்தும் தவறாகப் பேசினார் என்பது எத்தனை பெரிய பொய், பித்தலாட்டம்! ஒரு நாளும் அவர் அப்படி எந்த ஒரு கருத்தையும் எங்கும் வெளியிட்டதில்லை. எங்கும் வெளியிடாத ஒரு கருத்தையும், பல வரலாற்றுச் செய்திகளையும் வெறும் இரண்டு நிமிடச் சந்திப்பில் அவர் சீமானிடம் சொல்லிவிட்டார் என்பதை விட மோசடி வேறு என்ன இருக்க முடியும்?

எல்லாவற்றிற்குமான விடை, 31, டிசம்பர் மாதம் 2019, முகநூலில் வெளியாகி உள்ள டி. பாலசுப்பிரமணிய ஆதித்தனின் பதிவில் உள்ளது! துக்ளக் ஆசிரியர் சோ, ஆடிட்டர் குருமூர்த்தி இருவரும் ஒருவரைத் தன்னிடம் அழைத்து வந்ததாகவும், நாம் தமிழர் கட்சி என்னும் பெயரை அவருக்குக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டதாகவும், தன் அண்ணன் சிவந்தி ஆதித்தன் கூறியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளியில் அமர்ந்திருந்த அந்த நபர் சீமான், உள்ளே வந்ததும் தன் காலைத் தொட்டுக் கும்பிட்டதாகச் சிவந்தி ஆதித்தன் கூறுகிறார். மேலும், அந்த நபரை, நாடார் சங்க மாநாடுகளில் தான் பார்த்திருக்கிறேன் என்றும் எழுதுகிறார்! இவ்வளவுதான் அந்த நபரின் யோக்கியதை!

ஆக மொத்தம் சோ, குருமூர்த்தி போன்ற யோக்கியர்களால் சிவந்தி ஆதித்தனுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு, கட்சி தொடங்கிய மாபெரும் தமிழின உணர்வாளர்தான் இந்தச் சீமான்! முதல் கோணல் முற்றும் கோணலாகத்தானே இருக்க முடியும்!


பார்ப்பனர்களால் உருவாக்கப்பட்டு, பெரியார் மீது பார்ப்பனர்களால் வீசி எறியப்படும் ஒரு சாக்கடைத் தண்ணீர்தான் சீமான் என்பது தெளிவாகப் புரிகிறது! அதனால் தான் ஹெச். ராஜா தொடங்கி, சமூக எதிரிகள் அனைவரும் இன்று சீமானைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அநாகரிகமாகவும், அடாவடித்தனமாகவும் பேசும் ஒரு ஆளைக் களத்தில் இறக்கி விட்டால், அதனால் ஒரு கலவரம் வரக்கூடும். அப்படி ஏற்படும் கலவரத்தில் தாங்கள் குளிர் காயலாம். திமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சரியில்லை என்றும் சத்தம் போடலாம் என்பதே அவர்களின் ரகசியத் திட்டம் என்பதைத் தமிழர்கள் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டிய நேரம் இது! ●


# தமிழ்நாட்டைக் காக்கும் அரண் பெரியார்!

## தோழர் தியாகு

**(அண்மையில் 'புதிய தலைமுறை' தொலைக் காட்சியின் 'நேருக்கு நேர்' விவாதத்தில் தோழர் தியாகு பேசியதில் இருந்து....)**



ஒரு அப்பட்டமான பொய்யைச் சொல்லிவிட்டு அதற்குச் சான்று கேட்டால் "நீ குடு"ன்னு திருப்பி கேட்கிற அயோக்கியத்தனத்துக்கு விமர்சனம்னு பெயரா? விவாதம்னு பேயரா? இப்போது வந்திருப்பதெல்லாம் அப்பட்டமான அவதூறு. சான்று கேட்டால் "நீங்கள் கொடுங்கள்" என்பதை யாராவது ஏற்றுக் கொள்வார்களா? பெரியாரின் மொழியில் சொன்னால் இது அறிவு நாணயம் அற்ற செயல். பெரியார் ஏன் இந்தச் சூழலில் தேவைப்படுகிறார்? இந்தச் சூழல் என்றால் என்ன? தமிழ்நாட்டு மக்கள் ஒரு இந்துத்துவப் படையெடுப்புச் சூழலில், அதை எதிர்த்து நம்மைக் காக்கிற ஒரு கேடயமாக, தமிழகத்தைக் காக்கும் அரணாகப் பெரியாரும், அவருடைய சிந்தனைகளும், அவர் தொடங்கிய இயக்கமும் தேவைப்படுகின்றன. அப்போது தன் காலத்தில் பெரியாரைப் பற்றிப் பெரிதும் போற்றிப் பேசியவர்கள் பல பேர் உண்டு. அவரோடு கருத்து மாறுபட்டவர்கள் உட்பட. எல்லோரும் அவரைத் தந்தை பெரியார் என்று ஏற்றுக் கொண்டார்கள். திரு.வி.க உட்பட பல தலைவர்கள். ஏ.எஸ்.கே ஐயங்கார் அவரைப் பற்றிப் பிரமாதமாகப் பேசும் போது, "எல்லோருமே ஐயங்கார் என்று போடும்போது நீங்களும் ஐயங்கார் என்று போடுகிறீர்களே" என்று பெரியாரிடம் கேட்டபோது, பெரியார் சொன்னார், "மற்றவர்கள் எல்லாம் என்னைப் போற்றுவதில் என்ன இருக்கிறது? ஒரு ஐயங்கார் பெரியாரை ஏற்றுக் கொண்டான் என்று சொல்வது தானே முக்கியம்? அதனால் அது இருக்கட்டும்" என்று சொன்னார். அதுபோல பல உதாரணங்களைச் சொல்ல முடியும். எத்தனையோ தலைவர்களை, மாறுபட்டவர்களைச் சொல்ல முடியும். அவரோடு மாறுபட்டுத் தமிழ் தேசிய நிலைப்பாட்டில் இருந்த பாவலரேறு போன்றவர்கள் எல்லாம் அவரைப் போற்றி மிக அழகாகப் பாடல் புனைந்தார்கள். கவிஞர் காசி ஆனந்தன் எழுதி இருக்கிறார். எவ்வளவோ பேர் எழுதியிருக்கிறார்கள். பாவேந்தர் அவரைப் பற்றி மிகச் சுருக்கமாகச் சொன்னார். "தொண்டு செய்து பழுத்த பழம்; தூய தாடி மார்பில் விழும்; மண்டைச் சுரப்பை உலகு தொழும்; மனக்குகையில் சிறுத்தை எழும்; அவர்தான் பெரியார்" இந்த வியப்பு கலந்த பாராட்டு உரை என்பது தமிழ்நாட்டில் பெரியாருக்குப் பொருந்தும். இன்னும் சிலருக்கு ஓரளவுக்குப் பொருந்தலாம். உலக அளவில் மிகப்பெரிய மெய்யியல் அறிஞர்களுக்குக்கூட பொருந்தலாம். ஆனால் பெரியார் வாழ்ந்த களம், காலம் ஆகியவற்றை ஒட்டிப் பெரியாரை இதே போன்ற ஒரு நான்கு வரிகளில் எழுத வேண்டும் என்று நான் எழுதினேன். "தமிழினத்தின் தன்மான அடித்தளம் ; சமூக நீதி புத்தமைப்பின் உளைக்களம்; தந்தை பெரியார் விடுதலைச் சிந்தையின் விளைநிலம்; தமிழினத்தின் தன்மானத்திற்கு அவர் தான் அடித்தளம்".



தோழர் தியாகு

இதை நாம் மட்டுமல்ல, 1925 இல் குடியரசு ஏட்டைத் தொடங்கி சுயமரியாதை இயக்கத்தைப் பெரியார் நிறுவினார். இது என்னவென்றால் தமிழினம் தன்னைத்தான் அடையாளம் கண்டுகொள்ளும் போராட்டத்தின் தொடக்கம் என்று இ.எம்.எஸ் நம்பூதிரிபாட் தீக்கதிர் பொங்கல் மலரில் எழுதினார். 1938 இல் ராஜகோபாலாச்சாரியாரின் இந்தித் திணிப்புக்கு எதிராக மொழிப் போருக்குத் தலைமை வகிக்கிறார் பெரியார். தமிழர் தந்தை என்று அவரோடு எத்தனையோ வகையில் மாறுபட்டிருக்கக் கூடிய மறைமலை அடிகள், நாவலர் சோமசுந்தர பாரதியார், கி.ஆ.பெ. விசுவநாதம், கருமுத்து தியாகராயர் ஆகிய எத்தனையோ பேர் அவரைத் தமிழர் தலைவர் என்று அழைத்தார்கள். அப்போது உள்ள குடியரசு ஏடுகளை எடுத்துப் பார்த்தால் தெரியும். எவ்வளவு பொறுப்போடு அவர் எல்லா தரப்பட்ட மக்களையும் அந்தப் போராட்டத்திற்கு ஆதரவாகத் திரட்டுகிற முயற்சியில் ஈடுபட்டார் என்று.

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## தமிழரை அவமதிக்கும் ஆளுநர்

பாரதத்தின் சனாதன நாகரிக மரபில், கடவுள் பக்தியின் உன்னதத்தைத் திருவள்ளுவர் கற்றுக் கொடுத்தார் என்று, திருவள்ளுவருக்குக் காவி அணிவித்துத் திருவள்ளுவர் நாளில் ஆர்.என்.ரவி செய்தி வெளியிடுகிறார்.

பாரதத்தின் சனாதன மரபையோ அல்லது பக்திமயத்தையோ வள்ளுவர் எங்கும் சொல்லவில்லை. இதன்மூலம் ஆர்.என்.ரவி திருவள்ளுவருக்குக் காவிச் சாயம் பூச முயல்கிறார் என்பது தெளிவாகிறது.

திருவள்ளுவரை உலகம் முழுவதும் கொண்டு சென்றவர், திருக்குறளை அயல்மொழிகளில் மொழிபெயர்க்கச் செய்தவர் மோடி என்றுவேறு பிதற்றுகிறார் அவர். பெஸ்கி என்ற வீரமாமுனிவர் 1730 ஆம் ஆண்டிலேயே திருக்கிறளை முதன்முதலாக ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார். அதுமுதல் 1983 வரை 30 மொழிகளில் 117 மொழிபெயர்ப்புகள் வெளிவந்துள்ளன. சமஸ்கிருதத்தில் கூட திருக்குறள் மொழிபெயர்ப்பு இருப்பதாக உ.வே.சா கூறியிருக்கிறார்.

இந்தக் காலங்களில் மோடியின் அரசியலே தெளிவாக இல்லை. எனவே மோடிக்கும் திருக்குறளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

ஒன்று ஆர்.என்.ரவி அரசியல் சாசனத்திற்கு உட்பட்ட ஆளுநராகச் செயல்பட வேண்டும். அல்லது முழுநேர அரசியலுக்கு வந்துவிட வேண்டும், ஆளுநர் பதவியை விட்டுவிட்டு.

அதிகாரப் பதவியில் இருந்து கொண்டு, தமிழர்களுக்கும், தமிழ்நாட்டிற்கும், தமிழ்நாடு அரசுக்கும் எதிராகக் காவி அரசியல் செய்வது, ஆளுநருக்கு அழகில்லை.

பொங்கல் நாள் என்று சொல்ல விரும்பாத அவர் 'லோஹ்றி, மகர சங்கராந்தி, போகலி, பிஹு உத்தராயணத்தின் விசேஷமிக்க நாள்' என்று தமிழைப் புறக்கணிக்கும் ஆளுநர் இனியும், இங்கே தேவையில்லை.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

முன்பக்கத் தொடர்ச்சி...

இந்திய அரசமைப்புச் சட்டம் வந்தது. உயர் நீதிமன்றத்திலும் உச்ச நீதிமன்றத்திலும் வகுப்புரிமையை ஒழித்துக் கட்டுவதற்கான ஒரு தீர்ப்பு வந்தது. அதை எதிர்த்து இங்கு ஒரு போர்க்களம் கண்டார் பெரியார். இவருடைய போராட்டத்தை அங்கீகரித்து அன்று சட்ட அமைச்சராக இருந்த அம்பேத்கர், நாட்டின் தலைமை அமைச்சராக இருந்த நேரு தமிழ்நாட்டில் இருந்து இப்படி ஒரு குரல் வந்தது என்பதால் தான் அரசமைப்புச் சட்டத்தின் முதல் திருத்தம் கொண்டு வந்தார்கள்.

நான் தமிழ்த் தேசியத்தின் பக்கம் உறுதியாக நிற்கிறேன். எனக்குப் பெரியாரை ஏற்றுக் கொள்வதில் எந்தச் சிக்கலும் இல்லை. நான் தமிழ் தேசியத்தின் வழிகாட்டியாகப் பெரியாரை ஏற்றுக்கொள்கிறேன். பெரியாரை நீக்கிய தமிழ்த் தேசியம் சாதிய தமிழ்த் தேசியம். அது வலதுசாரி தமிழ்த் தேசியம். மதவாதத் தமிழ்த் தேசியம். இனவாதத் தமிழ் தேசியம். பெரியார் இனவாதி அல்ல. அவர் இன உரிமைக்குப் போராடியவர். இந்த இடத்தில் யாருமே பெரியாருக்கு நிகர் இல்லை. எத்தனையோ பேர் போராடினார்கள். தமிழ்நாடு தமிழருக்கே முழக்கம் சென்னை கடற்கரையில் முழங்கிய போது 1938 செப்டம்பர் 11 ஆம் நாள் நாவலர் சோமசுந்தர பாரதியார் இருந்தார். மறைமலை அடிகள் இருந்தார். "நாங்கள் மூன்று பேரும் இந்த முழக்கத்தைக்கொடுக்கும் போது தமிழ்நாட்டில் வேறு யார் இருக்கிறார்கள் இதை எதிர்க்க"என்று பெரியார் அந்த மேடையில் கேட்டார். இது உண்மை. அவர்களுக்கெல்லாம் உரிய பங்கு உண்டு அந்தப் போராட்டத்தில். நான் கேட்பது அந்த முழக்கத்தை இறுதிவரை எடுத்துச் சென்றவர் யார்? இவர்கள் அல்ல. யார் இயக்கம் நடத்தியவர்கள்? அந்தக் கூட்டம் எதற்கு நடக்கிறது? பட்டுக்கோட்டை அழகிரி தலைமையிலான நடை பயணத்தின் இறுதியில் நடக்கிறது. பட்டுக்கோட்டை அழகிரி யார்? அவர் பெரியாரின் தொண்டர். சுயமரியாதை இயக்கம் தான் இயக்கம் நடத்துகிறது.

பெரியாரின் சிறப்பு என்னவென்றால் அவர் இயக்கம் இல்லாமல் ஏடு இல்லாமல் எப்போதும் இருந்ததில்லை. "குடியரசு" "விடுதலை" என்ற பெயர்கள் எல்லாம் எதைச் சுட்டுகின்றன? எந்தக் குடியரசு? தமிழ் குடியரசு. யாருடைய விடுதலை? தமிழ்நாட்டுடைய விடுதலை. அவர் தெளிவாக இருந்தார். அதைத் தவறாக எடுத்துக் கொண்டால் இந்த நிலப்பரப்பின் விடுதலை என்பது முடியாது. அதனால்தான் பெண் விடுதலை, ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதி என்று எல்லா விடுதலைகளையும் சேர்த்த ஒரு விடுதலையை அவர் கோரினார். அதனால் பெரியாரின் பார்வையில் பெண் விடுதலை உள்ளிட்ட சமூக நீதிப் பார்வை என்பதும், தமிழ்நாட்டு விடுதலை என்பதும் அவருடைய இரண்டு கண்கள். கண்கள் இரண்டானாலும் பார்வை ஒன்றுதான். அதுதான் புதிய உரிமை பெற்ற விடுதலை பெற்ற தமிழ் தேசம். இதை எப்படித் தமிழ் தேசியர்கள்களால் எதிர்க்க முடியும்?

**-தொகுப்பு : சாரதாதேவி**

# எதைத் தருவார் சீமான்?



‘த யங் கார்ல் மார்க்ஸ்’ படத்தில் ஏங்கெல்ஸ் மார்க்சிடம் ஒரு விஷயம் சொல்வதாக ஒரு காட்சி வரும். ‘பெரிய விஷயங்களை எல்லாம் எழுதியாயிற்று. அதை மக்களுக்கு இயக்க நோக்கில் எளிமையாகச் சொல்ல ஒரு நூல் எழுதவேண்டும்’ என்பார் ஏங்கெல்ஸ்.

‘கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை’ நூல் இப்படித்தான் பிறந்தது.

சீமான் மாதிரி தீவிரமான வாசிப்பற்றவர்கள் பெரியார் பேசுகிற ஆண்-பெண் உறவு தொடர்பான மானுடவியல் விஷயங்களைப் புரிந்து கொள்ளவே முடியாது. பெரியாரின் உறவுமுறைகள் தொடர்பான கருத்துக்கள் மானுடவியலுக்கும் புராணப் பொய்களுக்கும் இடையில் சஞ்சரிப்பவை.

விமானத்தை, சர்ஜரியை நாங்கள்தான் கண்டுபிடித்தோம் என்பவர்கள்தான் புனைவுப் பாத்திரங்களான ராமனையும் கிருஷ்ணனையும் நவீன அரசியல் நாயகர்களாக முன்வைக்கிறார்கள். பெரியார் மதத்தை நவீன காலத்துக்கு உரியதாக முன்வைக்கும் பார்ப்பனிய மைய இந்துத்துவ அரசியலுக்கு எதிராகப் புராணத்தைக் கட்டுடைக்கிறார்.

இதனை அவர் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். அதற்குரிய வெகுமக்கள் மொழியை அவர் கையாள்கிறார். அந்த மேதைமை அவருக்கு இருப்பதால்தான் அவர் வெகுமக்களாலும் அறிவாளிகளாலும் ஒப்பப்படுகிற மனிதராக இருக்கிறார்.

இந்துத்துவர்களான எச்.ராஜா, அண்ணாமலை, தமிழிசை, குருமூர்த்தி போன்றவர்கள் திரும்பத் திரும்பத் தோற்கிற இடத்திற்குள் தமிழ்தேசியத்தின் பெயரில் சீமான் நுழைந்திருக்கிறார்.

பெரியார் ஆண்-பெண் உறவை மானுடவியல் நோக்கில், புராணக் கதைகளோடு முன்வைத்து அலசும் இரண்டு பனுவல்களை வாசித்தேன். தர்க்கத்தை நம்புகிறவர்கள் இவற்றை நிராகரிக்கவே முடியாது. நீதிமன்றத்தில் சீமான் பெரியார் குறித்துச் சொல்கிற கொச்சைக்கான ஆதாரத்தைத் தரவே முடியாது.

இல்லாத ஆதாரத்தை எப்படித் தரமுடியும்?

**-யமுனா ராஜேந்திரன் (முகநூலிலிருந்து)**

## திராவிடம் சீர்திருத்தம்

**"திராவிட நாடு என்பது ஒரு பொருளாதார, சமுதாய சீர்திருத்தப் பிரச்சனையே ஒழிய, அது ஒரு அரசியல் பிரச்சனையல்ல. தீண்டாமை ஒழியவேண்டும் என்பது போலவே, சுரண்டல் ஒழியவேண்டும் என்கிறோம். அந்நியனுக்கு நம்நாடு சந்தையாய் இருக்கக்கூடாது என்பது போலவே, அந்நிய மாகாணத்துக்கு நம் நாடு சந்தையாய் இருக்கக் கூடாது என்கிறோம்"**

**-(குடிஅரசு, 2-12-1944)**




## திராவிடர் தமிழரே



**"... திராவிடம் என்கிற பேச்சே தமிழ் வார்த்தை யாகும். எப்படியெனில் திரு இடம் என்பதுதான் திருவிடமாகி திராவிடம் என்பதாக ஆகிவிட்டது. தமிழர்கள் திரு என்ற வார்த்தையை ஒரு மேன்மை அணியாக ஒவ்வொன்றுக்கும் உபயோகிப்பது வழக்கம்...நமது பண்டிதர்கள் பலர் "தமிழ் என்பது த்ரமிளமாகி, திரமழமாகி, திராவிட மாகிவிட்டது"என்று சொல்வதுண்டு. ஆனால் ஒரு வார்த்தையானது 4, 5 தடவை மாறியிருக்கும் என்பதைவிட நான் சொல்லுகிறபடி ஒரே மாற்றம்தான் ஆகியிருக்கலாம் என்பது பொருத்தமாக இல்லையா?அது எப்படி இருந்தாலும் சரி; திராவிடநாடு, திராவிட மொழி, திராவிட மக்கள் என்பனவற்றைத் தமிழ்நாடு, தமிழ்மொழி, தமிழ் மக்கள் என்ற கருத்தில்தான் வழங்குகிறார்கள். ஆதலால் திராவிடர் என்பவர் தமிழரே ஆவார்கள். அதனாலேயே தமிழர்கள் என்று பேசுகிறேன்.**

**-பெரியார் (சிந்தனையாளன், பொங்கல் மலர், சனவரி 1997).**

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian